Virtual Schools

மார்ச் 2021

Toronto District School Board

**TDSBஇன் மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலைக் குடும்பத்தவர்களுக்கான செய்திமடல்**

மெய்நிகர் பாடசாலைச் செய்திமடலின் மார்ச் 2021 இதழுக்கு உங்களை வரவேற்கின்றோம்.

மெய்நிகர் பாடசாலையில் மட்டுமன்றி, TDSB பாடசாலைகள் அனைத்திலும் என்ன நடக்கிறது என்பது பற்றித் தெரிந்துகொள்ள உதவும் தகவல்கள் மற்றும் இற்றைப்படுத்தல்களைக் கொண்டிருக்கும் இந்த மாதாந்த வெளியீடு உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமென நாங்கள் நம்புகிறோம்

உங்களுக்குத் தெரியும், கல்வி அமைச்சு மார்ச் விடுமுறையைத் தாமதப்படுத்தியுள்ளது, ஆதலால் ஏப்ரல் 12 முதல் 16 வரை வரவிருக்கும் விடுமுறையைத் தற்போது நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இந்த வருடம் அனைவருக்கும் பரபரப்பான மற்றும் சவாலான வருடமாக இருப்பதால், மாணவர்கள் மற்றும் குடும்பத்தவர்கள் அனைவரும் சற்று ஆறுதலாக இருப்பதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்துவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்,

மேலதிக தகவல்கள் மற்றும் இற்றைப்படுத்தல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.tdsb.on.ca/virtualschool அத்துடன், பின்தொடருங்கள் Twitter @tdsbvs.

## COVID ஆரம்பத்தின் ஒருவருட நிறைவின்போது, மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு ஆதரவளித்தல்

மார்ச் 11 இல் ஆரம்பமாகும் இந்த வாரம், எங்களின் வாழ்க்கையை முற்றாக மாற்றியிருக்கும் உலகளாவிய COVID-19 தொற்றுநோய்ப் பரம்பலின் ஒரு வருட நிறைவைக் குறிக்கின்றது. இந்த வருடம் ஒரு சவாலான ஆண்டாக இருந்திருக்கிறது, அதிகளவிலான நிச்சயமற்ற தன்மையையும் மிகப்பெரிய மாற்றங்களையும் நாங்கள் எதிர்கொண்டிருக்கிறோம். இந்தத் தொற்றுநோய்ப் பரவல் சமூக ஏற்றத்தாழ்வுகளை கோடிட்டுக்காட்டி அடக்குமுறைக்கு எதிரான விமர்சனரீதியான உரையாடல்களை ஆரம்பித்திருக்கிறது. தொற்றுநோய்ப் பரவல் ஏற்படுத்துகின்ற மன அழுத்தம் மற்றும் பிரச்சினைகளை நாங்கள் விளங்கிக்கொள்கின்ற அதேவேளையில், பலம், சமூக உருவாக்கம், எங்களின் விடாமுயற்சி ஆகியவற்றையும் எங்களால் இனம்காணமுடிகின்றது.

பாடசாலைக் கற்றல் எங்களின் பிள்ளைகளில் ஏற்படுத்தியிருந்த மாற்றங்கள் மற்றும் சவால்களை, ஈடுகொடுக்கும்தன்மை, இரக்கம், ஒருவருக்கொருவர் மற்றும் எங்களில் நாங்கள் செலுத்தும் அக்கறை போன்றவற்றின் உதவியுடன் நாங்கள் எவ்வாறு அந்த நேரத்தில் எதிர்கொண்டோம் என்பதைப் பற்றிச் சிந்திக்க வைக்கிறது.

கல்வி அதிகாரி மற்றும் துணை அதிகாரிகளின் முழுமையான செய்தியை வாசியுங்கள்.

## நினைவூட்டல்: மார்ச் விடுமுறை திகதிகளில் மாற்றம்

மார்ச் விடுமுறையை கல்வி அமைச்சு தாமதப்படுத்தியுள்ளது. இந்த விடுமுறை **ஏப்ரல் 12 – 16, 2021** ஆக இருக்கும்.

## இயக்குநரின் வருடாந்த அறிக்கை

இயக்குநரின் வருடாந்த அறிக்கை 2020 கடந்த வருடம் TDSB பாடசாலைகள் அனைத்திலும் நிகழ்ந்த முக்கியமான விடயங்கள், Multi-Year Strategic Plan (பல வருடங்களுக்கான உத்தித் திட்டம்) இல் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்பவற்றைக் காட்டுகிறது. இணையத்தில் அறிக்கையை வாசியுங்கள்.

## வெளிக்களக் கற்றலுக்கான புதிய வலைப்பக்கம்

பாதுகாப்பாக வெளியே செல்வது எப்போதும் இருந்ததைவிட, இப்போது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. மாணவர்கள், குடும்பத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் வெளிப்புறத்திலிருந்து பாதுகாப்பான மற்றும் கல்விரீதியான வழியில் அதிக பயனைப் பெறுவதற்கு உதவுவதற்காக, புதிய வெளிக்களக் கற்றல் வலைத்தளத்தை TDSB அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய வலைத்தளத்தை இன்றே பாருங்கள்!

## TDSB உரையாடல் தொடர்

நீங்கள் மேலும் அறிய விரும்புவதாக நாங்கள் கேள்விப்பட்ட தலைப்புகளில் நிகழும் நீங்கள் கலந்துகொள்ளக்கூடிய முறைசாரா தொடர்ச்சியான உரையாடல்களில் எங்களுடன் இணையும்படி குடும்பத்தவர்களை அழைக்கின்றோம். மிகச் சிறந்த நிபுணர்களின் பேச்சுக்களை இணையத்தில் செவிமடுங்கள் அத்துடன் கேள்வி, பதில் அமர்வுகளில் பங்குகொள்ளுங்கள். வரவிருக்கும் அமர்வுகள் தொடர்பான திகதிகள் மற்றும் விபரங்கள்.

## ரொறன்ரோ பொதுச் சுகாதாரப் பிரிவினரின் (TPH) தடுப்புமருந்து பற்றிய சமீபத்திய அறிவிப்பு

ரொறன்ரோ முழுவதும் தடுப்புமருந்துகள் கிடைக்கக்கூடியதாக இருப்பதால், அதுபற்றி மேலும் அறிவதற்குத் தயவுசெய்து TPH வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

### மனித உரிமைகள் வருடாந்த அறிக்கை

TDSB சமீபத்தில் மனித உரிமைகள் தொடர்பான அதன் வருடாந்த அறிக்கையை முதன் முதலாக வெளியிட்டிருந்தது. இந்த அறிக்கையை வாசிப்பதற்கு, ஒரு சம்பவம் பற்றிப் புகாரளிப்பதற்கு, கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அணுகுவதற்கு மற்றும் Q&A வாசிப்பதற்கு, மனித உரிமைகள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

### TDSB கிரேக்க மரபுத் திங்களைக் கொண்டாடுகின்றது

ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையில், மார்ச் மாதம் கிரேக்க மரபுத் திங்களாக உள்ளது. கிரேக்க கனேடியர் கனடாவுக்கு செய்த பல சாதனைகளையும் பங்களிப்புகளையும் கொண்டாடுவதற்கான ஒரு தருணம் இதுவாகும், அத்துடன் கிரேக்க கலாசாரத்தின் வரலாற்றை அடையாளம் காண்பதற்கும் அது பற்றி அறிவதற்குமான ஒரு வாய்ப்பாகவும் இது உள்ளது. மேலும் அறிக

இந்த வருடத்தின் கருப்பொருள்:

**1821-2021**

**சுதந்திரம் மற்றும் ஒற்றுமை– Ελευθερία και Ενότητα**

**எங்களின் வேர்களிலிருந்து கற்றல் … எங்களின் எதிர்காலத்தை வடிவமைத்தல்**

### தரம் 8 பாடநெறித் தெரிவு

ஜனவரி மற்றும் பெப்ரவரி முழுவதும், 2021/2022 பாடசாலை ஆண்டுக்கான அவர்களின் பாடநெறித் தெரிவுகளை மாணவர்கள் பூர்த்தி செய்திருக்கின்றனர். இந்தச் செயல்பாட்டின்போது குடும்பத்தவர்கள் கொடுத்த ஆதரவுக்கு நாங்கள் நன்றி கூறுகின்றோம். கேள்விகள் இருப்பின், உங்களின் மெய்நிகர் பாடசாலைக் கற்றல் மையத்தில் தரம் 8க்குப் பொறுப்பாகவிருக்கும் உதவி அதிபரைத் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள்.

### மெய்நிகர் பாடசாலை மாணவர்களுக்கான மளிகைப்பொருள் அட்டைகள்

குறிப்பாக COVID -19 காலத்தின் போது, உணவைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளல், அனேகமான TDSB குடும்பத்தவர்களுக்கு நிதர்சனமான ஒரு பிரச்சினையாக இருக்கிறது, மாணவர்களின் வெற்றிக்கான ரொறன்ரோ அமைப்பு (TFSS) தேவையிருக்கும் மாணவர்களுக்குத் தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றது, மெய்நிகர் வழியில் கற்கும் மாணவர்களுக்கு 17,000, $ 50 அன்பளிப்பு அட்டைகளுக்கு அது நிதியளித்திருப்பதுடன், அவற்றைத் தபாலில் அனுப்பியும் இருக்கின்றது. Food for Kids (சிறுவர்களுக்கான உணவு - FFK) எனும் முன்னெடுப்பு அமைப்பு ஊடாக அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் மற்றும் தேவைகளைத் தாமாக அடையாளப்படுத்தியவர்கள் என தீர்மானிக்கப்பட்டவர்களைக் கொண்ட சமூகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. மெய்நிகர் பாடசாலைகளுக்கு மே மாத இறுதிவரை (போதுமான நிதி இருப்பின்) ஆதரவைத் தொடர்வதற்கும், முன்னுரிமைக்குரியவர்களாக அடையாளம் காணப்பட்ட சமூகங்களில் உள்ள இரண்டாம்நிலைப் பாடசாலை மாணவர்களுக்கு கோடைகால ஆதரவு கிடைப்பதை உறுதிசெய்வதற்காகவும் TFSS செயல்படுகிறது. TDSB பாடசாலைகள் திறந்திருக்கும் போது, பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கான போஷாக்குத் திட்டங்களுக்கும் TFSS தொடர்ந்து ஆதரவளிக்கிறது.

### பெற்றோர்/பாதுகாவலர் மற்றும் சமூக தன்னார்வச் செயல்முறை

எங்களின் பாடசாலைக் குடும்பச் சமூகத்தில் நிபுணத்துவம் மற்றும் வளங்கள் எங்களிடம் நிறைய இருக்கிறது. மெய்நிகர் பாடசாலை வகுப்பறைகளுக்கு ஆதரவளிப்பதற்குப் பல பெற்றோர் / பாதுகாவலர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர். நேரில் கற்கும் பாடசாலையில் தன்னார்வத்தொண்டு செய்வதற்குத் தேவைப்படுவது போலவே, "பிரச்சினையில்லாதவர்கள்" என்ற பொலிஸ் சான்றிதழை மாணவர்களுடன் பணியாற்றுவதற்கு முன்பாக தன்னார்வலர்கள் வழங்கவேண்டும். தன்னார்வத்தொண்டு செய்வதற்கு நீங்கள் விரும்பினால், தயவுசெய்து இந்தப் படிவத்தை பூர்த்தி செய்யுங்கள்:

பெற்றோர்/பாதுகாவலர்கள் மற்றும் சமூகத் தன்னார்வத்தொண்டர்கள்

கற்றல் மையம், உங்களின் பிள்ளையின் வகுப்புக் குறியீடு (class code) மற்றும் ஆசிரியரின் பெயரை வழங்குமாறு இந்தப் படிவம் உங்களைக் கேட்கிறது. இந்தத் தகவல்கள் உங்களிடம் இல்லை என்றால், தயவுசெய்து உங்களின் பிள்ளையின் ஆசிரியரிடம் கேளுங்கள்.

Police Reference Check (PRC) இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்தும்படி கேட்கும் கேள்வியை உள்ளடக்கியிருப்பதுடன் செல்லுபடியாகக்கூடிய PRC ஒன்றை எப்படிப் பெற்றுக்கொள்வது என்பது தொடர்பான தகவல்களையும் இந்தப் படிவம் வழங்கும். விண்ணப்பத்தைப் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், Police Reference Check (PRC) அலுவலகத்தை 416-393-0759 என்ற இலக்கத்தில் தொடர்புகொள்ளுங்கள் அல்லது மின்னஞ்சலிடுங்கள் PoliceReferenceCheckOffice@tdsb.on.ca.

PRC க்கான செலவை($ 20) ஈடுசெய்வதற்கு உங்களுக்கு நிதி உதவி தேவைப்பட்டால், செலவுக்கான மானியத்தைப் பெறுவதற்குத் தயவுசெய்து நேரில் கற்கும் அந்தப் பாடசாலை அதிபருடன் பேசுங்கள். மாற்றுவழியாக, 416-397-3529 என்ற இலக்கத்தில் Parent and Community Engagement Office (பெற்றோர் மற்றும் சமூக ஈடுபாட்டு அலுவலகம்) ஐயும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், உங்களின் கற்றல் மையத்திற்கான அதிபருடன் தொடர்புகொள்ளுங்கள்.

Virtual Schools

மார்ச் 2021

## சமூக ஈடுபாடு: ஊடாட்டமுள்ள இணையக்கருத்தரங்குகள்

குடும்பத்தவர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களுக்கான இணையக் கருத்தரங்குகளை மார்ச் மாதம் முழுவதும் ஆரம்பநிலை மெய்நிகர் பாடசாலை நடத்தியிருந்தது, அவை பின்வருவம் தலைப்புகளை உள்ளடக்கிருந்தன:

- மெய்நிகர் உலகில் பிள்ளைவளர்ப்பு: உளவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகிகளால் நடாத்தப்பட்ட ஊடாட்டமுள்ள ஓர் அமர்வு
- இணையத்தில் பாதுகாப்பு: இணையத்தில் உங்களின் பிள்ளையைப் பாதுகாப்பாக வைத்திருப்பது எப்படி
- வளரிளம்பருவத்தினரின் மன ஆரோக்கியம்

**ஏப்ரல் 7 புதன்கிழமை இரவு 7 மணிக்கு,** அடுத்த ஊடாட்டமுள்ள இணையக்கருத்தரங்கில் எங்களுடன் இணையுங்கள். திரையில் செலவழிக்குக் நேரத்தைக் கையாளல், இணையத்தில் வினைத்திறனான இருக்கக்கூடிய வழிகளை அடையாளம் காணல், பிள்ளைகள் இணையத்தில் செலவழிக்கும் நேரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்த அவர்களுக்கு எப்படி உதவலாம் போன்ற தலைப்புகள் இதில் அடங்கும்.

அடிமைப்பட்டிருக்கின்றனரா அல்லது வலுப்பெற்றிருக்கின்றனரா? உங்களின் பிள்ளையின் இணையக் கற்றலுக்கு எப்படி ஆதரவளிக்கலாம்.

## TDSB Parent Academy – ஏப்ரல் அட்டவணை

**செவ்வாய்க்கிழமை, மார்ச் 30, 2021, பி.ப. 6:30**

**இனத்துவத்துக்கு எதிராக இருத்தல் தொடர்: எங்களின் பாடசாலை சமத்துவம் தொடர்பாக எப்படித் தோற்றமளிக்கும்**
எங்களின் பாடசாலை சமத்துவம் தொடர்பாக எப்படித் தோற்றமளிக்கும் என்பதை ஆராயுங்கள்; சமத்துவத்தின் இலக்குகள் மற்றும் பாடசாலை மேம்பாட்டுத் திட்டமிடல் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 27, 2021, பி.ப. 6:30**

**வேண்டுமென்றோ அல்லது அப்படியில்லாமலோ அவமானப்படுத்துவதற்காகச் சொல்லப்படும் விடயங்கள் (Microaggressions) மற்றும் மனித உரிமை மீறல்களை எப்படிக் கையாள்வது**
அடக்குமுறையைக் கையாள்வதற்கான உத்திகள், வேண்டுமென்றோ அல்லது அப்படியில்லாமலோ அவமானப்படுத்துவதற்காகச் சொல்லப்படும் விடயங்கள் (Microaggressions) மற்றும் மனித உரிமை மீறல்களை எப்படிக் கையாள்வது என்பது பற்றி நாங்கள் கலந்துரையாடுகிறோம்.

Parent Academy என்பதன் கீழ் மேலும் அறியுங்கள்: tsdbHUB.ca.

## தொடரும் தொழில்முறைக் கல்வி கற்றல்

மாணவர்களை கற்றலில் ஈடுபடுத்தி அவர்கள் ஆழமாகக் கற்பதை ஊக்குவிப்பதற்காக, தமது அறிவை விசாலிப்பதற்கும் இலத்திரனியல் தளங்களையும் கருவிகளையும் பயன்படுத்தும் செயற்பாட்டில் பயிற்சிபெறுவதற்காகவும் ஆசிரியர்கள் தொடர்ந்தும் தொழில்முறை கற்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

மார்ச் மாதத்தில் நிகழ்ந்த தொழில்முறைக் கல்வி கற்றலின் சில உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

- வழிகாட்டப்பட்ட வாசிப்புக்கான உத்திகளைத் தினசரி பயிற்சியில் ஒருங்கிணைக்கும் திறனை வளர்த்தல்
- Google Education Certification (கூகிளில் கல்வியூட்டல் சான்றிதழ்) இல் பங்கேற்றல்
- Virtual Fairs இல் பங்கேற்றல்: திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் இணையத்திலிருக்கும் வழிவகைகளைக் கண்டறிதல் மற்றும் மாணவர்களின் கருத்துக்களைப் பெறல் மற்றும் இலத்திரனியல் திறமையை மேம்படுத்துதல்
- Math Leadership Team (கணித தலைமைக் குழு): சிறப்பான அறிவுறுத்தல் ஆதரவுகளை வழங்குவதற்கான உண்மையான இலக்கங்களைப் பயன்படுத்தல் மற்றும் கணிதரீதியான சிந்தனையைக் கவனித்தல் மற்றும் பெயரிடுதல்

## மெய்நிகர் பாடசாலைகளின் பணியாளர் விபரக்கொத்து

இலகுவில் பார்வையிடுவதற்காக மெய்நிகர் பாடசாலை நிர்வாகக் குழுவினரின் விபரக்கொத்து கீழுள்ளது. ஒவ்வொரு கற்றல் மையத்திலும் உப அதிபர் மற்றும் அதிபர்கள் தரங்களின் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கற்றல் மையம் 1 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை

கற்றல் மையம் 2 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை

கற்றல் மையம் 3 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை

கற்றல் மையம் 4 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை